## திராவிட இயக்கத்தின் அடையாளமான தமிழ்

# இந்தித் திணிப்பு எதிர்ப்புக்கும், அழுத்தப்பட்ட சமூகங்களின் அங்கீகாரத்துக்குமான கருவியாக உள்ளது!

## கேரள மாநிலம் ‘மலையாள மனோரமா’ விழாவில் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் சிறப்புரை!



துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று (2.11.2024) கேரள மாநிலம் கோழிக்கோட்டில் நடைபெற்ற, மலையாள மனோரமா ஊடக குழுமத்தின் கலை மற்றும் இலக்கியத் திருவிழாவில் பங்கேற்று, “திராவிட இயக்க அரசியலில் இலக்கியம் மற்றும் மொழியியலின் தாக்கம்” என்ற தலைப்பில் உரையாற்றினார்.

**கோழிக்கோடு, நவ. 3–**

**கேரள மாநிலம், கோழிக்கோட்டில் நேற்று (நவம்பர் 2) அன்று, ‘மலையாள மனோரமா’ நடத்திய கலை இலக்கியத் திருவிழா– 2024–இல் தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார்.**

**அவரது உரை வருமாறு:–**

1890–ஆம் ஆண்டு முதல், வெளிவந்து கொண்டிருக்கும் இந்தியாவின் பாரம்பரியமும் பெருமையும் கொண்ட பத்திரிகைகளில் ஒன்றான ‘மலையாள மனோரமா’ நடத்துகிற இந்தச் சிறப்புக்குரிய கலை – இலக்கியத் திருவிழாவில் பங்கேற்று பேசுவதில், மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன்.

நான் தற்போது தமிழ்நாட்டுக்கு வெளியே இருந்தாலும், நான் சொந்த மண்ணிலே இருப்பது போன்ற உணர்வுதான் இன்று எனக்கு ஏற்படுகிறது.

அந்த அளவுக்கு அன்பையும், வரவேற்பையும் கேரள மண்ணில் எனக்கு நீங்கள் தந்திருக்கிறீர்கள்.

**திராவிட அரசியல்!**

இன்று இங்கு நிறைய நிகழ்ச்சிகள் நடைபெறவுள்ளன. பலர் உரையாற்றவுள்ளனர். எனவே எனது உரையை மிகச் சுருக்கமாக வைத்துக் கொள்ள நினைக்கிறேன்.

இந்தச் சிறப்புக்குரிய நிகழ்ச்சியில், `திராவிட அரசியலில் இலக்கியம் மற்றும் மொழியியல் கூறுகள்’ என்ற தலைப்பில், என்னைப் பேச அழைத்திருக்கிறீர்கள்.

அந்தத் தலைப்பில் பேசுவதை, நான் பெருமையாகக் கருதுகிறேன். ஏனெனில், தமிழ்நாட்டின் அடையாளம் மற்றும் வரலாறு ஆகியவற்றின் இதயமாக திராவிட இலக்கியம் இருக்கிறது.

திராவிட அரசியல் இயக்கம் என்பது, அதன் வலுவான மொழி மற்றும் கலாச்சாரப் பெருமைகளுக்குப் பெயர் பெற்றது. இலக்கியமும் மொழியும் அதன் அடித்தளமாக உள்ளன.

இலக்கியம், மொழி மற்றும் அரசியல் கூறுகள் ஆகியவை, தமிழ்நாட்டின் சமூக, அரசியல் நிலப்பரப்பை உருவாக்கியதில், பெரும் பங்கு வகிக்கின்றன.

தமிழ்நாட்டுக்கும் கேரளத்துக்கும் இடையிலான கலாச்சார, அரசியல் மற்றும் மொழி உறவு தொடர்பான வரலாறு நீண்ட பாரம்பரியத்தைக் கொண்டது. இலக்கியம், மொழி மற்றும் அரசியல் ஆகியவற்றில் இந்த இரண்டு மாநிலங்களுக்கும் இடையே நிறைய ஒற்றுமைகள் உள்ளன.

**வைக்கம் போராட்டம்!**

தமிழ்நாட்டில் பிறந்த தந்தை பெரியார் அவர்கள் 1924–இல், கேரளாவில் வைக்கம் போராட்டத்தை முன்நின்று நடத்தி வெற்றி பெற்றார்கள்.

அதே போல, கேரளத்தில் பிறந்த டி.எம்.நாயர் அவர்கள், தமிழ்நாட்டில் நீதிக்கட்சியின் தொடக்கப்புள்ளியாக இருந்து, தென்னிந்திய நல உரிமைச் சங்கத்தை ஆரம்பித்தார்கள். அது, தமிழ்நாட்டில் புதிய அரசியல் எழுச்சியை ஏற்படுத்தியது.

வைக்கம் போராட்டத்தின் நூற்றாண்டைப் போற்றும் வகையில், தமிழ்நாடு அரசும், கேரள அரசும் நிறைய நிகழ்ச்சிகளை நடத்தி உள்ளன.

இந்தியாவிலேயே இந்த இரண்டு மாநிலங்கள்தான் மிகவும் முற்போக்கான மாநிலங்கள். இரண்டு மாநிலங்களுமே பாசிசத்தையும் மதவாத சக்திகளையும் தூர விலக்கி வைத்துள்ளன.

பாசிசத்துக்கு எதிராக இந்த இரண்டு மாநில மக்களும் ஏன் கடுமையாக எதிர்த்து நிற்கின்றனர்? ஏனெனில், இங்கு முற்போக்கு அரசியல் வலுவாக இருக்கிறது.

**பேரறிஞர் அண்ணா, கலைஞர்!**

தமிழ்நாட்டில் திராவிட இயக்கம் தோன்றுவதற்கு முன்பு, இலக்கியம் என்று சொல்லப்பட்டவை எல்லாம், பக்தி இலக்கியங்கள், புராணக் கதைகளாகவே இருந்தன. ஆனால், எங்கள் தலைவர்கள் தமிழ் இலக்கியத்தின் மூலம் பகுத்தறிவையும் அறிவியல் சிந்தனையையும் பரப்பினர்.

பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர் போன்ற தலைவர்கள் மனித மாண்பிலும் கலாச்சாரத்திலும் வேர் கொண்டிருக்கும் திருக்குறள், சிலப்பதிகாரம், புறநானூறு, தொல்காப்பியம் உள்ளிட்ட இலக்கியங்களை மக்களிடையே எடுத்துச் சென்றனர். அந்தக் கூறுகளைப் புரிந்து கொள்ள நாம் 20–ஆம் நூற்றாண்டின் தொடக்கக் காலத்துக்குச் செல்ல வேண்டும். திராவிட இயக்கத்தின் முன்னோடியான சுயமரியாதை இயக்கம், எவையெல்லாம் கலாச்சாரத்தையும் மொழியையும் மேலாதிக்கம் செய்கின்றனவோ, அவற்றை எல்லாம் எதிர்த்து நின்றது.

திராவிட இயக்கம் தனது அடையாளத்தின் மையமாக தமிழை வைத்துள்ளது. தமிழ், வெறும் தொடர்பு கொள்வதற்கான மொழியாக மட்டுமல்லாமல் இந்தித் திணிப்பை எதிர்க்கவும், அழுத்தப்பட்ட சமூகங்களின் அங்கீகாரத்துக்காகவும் ஒரு கருவியாகப் பயன்படுத்தப்பட்டது.

**இந்தித் திணிப்பு எதிர்ப்பு!**

1930 மற்றும் 1960–களில் இந்தியை அலுவல் மொழியாக்க முயற்சிகள் நடைபெற்றபோது அதற்கு எதிராக திராவிட இயக்கம் வெகுண்டெழுந்தது. தமிழ்ப் பண்பாடு மற்றும் மொழி அடையாளத்துக்கு இந்தித் திணிப்பு அச்சுறுத்தலாக இருக்கும் என்று அது கருதியது.

பண்பாட்டை வலுப்படுத்தவும், சமூக மாற்றத்துக்கான வாகனமாகவும் இலக்கியம் பயன்படும் என்பதை, திராவிட இயக்கம் உணர்ந்தே செயல்பட்டது. பெரியாரின் எழுத்துகளும், அறிக்கைகளும், தலையங்கங்களும் சாதி ரீதியான ஒடுக்குதல்கள், ஆணாதிக்க நடைமுறைகள், சமூகத்தின் இறுக்கமான பிற்போக்குக் கூறுகள் ஆகியவற்றைக் கண்டித்தன. எல்லோருக்கும் சுயமரியாதை கிடைக்க பெரியார் அவர்கள் குரல் கொடுத்தார்கள்.

இலக்கியத்தை மக்களுடன் தொடர்பு கொள்வதற்கான கருவியாக எங்கள் தலைவர்கள் பார்த்தார்கள். அண்ணா மற்றும் கலைஞர் ஆகியோரின் பேச்சுக்களில் இலக்கியம், கவித்துவம், நகைச்சுவை என எல்லாமே கலந்திருக்கும். அதனால், திராவிட இயக்கத்தின் அரசியல் தத்துவம் சாமானியர்களுக்கு எளிமையாகப் புரிந்தது.

எங்கள் தலைவர்களின் படைப்புகள், திராவிட இயக்கத்தின் உள்ளார்ந்த விழுமியங்களான சமத்துவம், பகுத்தறிவு, மூடநம்பிக்கை எதிர்ப்பு ஆகியவற்றை எடுத்தியம்பின.

அந்த இலக்கிய, மொழியியல் கூறுகள் இன்றும் தமிழ்நாட்டு மொழிக் கொள்கை, பண்பாட்டு திருவிழாக்கள், கல்வித் திட்டம் ஆகியவற்றில் தாக்கம் செலுத்தி, தமிழ் அடையாளத்தின் தனித்துவத்தைப் பாதுகாக்கின்றன.

தமிழ் மொழி, இலக்கியம் ஆகியவற்றின் மீதான பற்று, இன்றும் மாநில சுயாட்சி, பண்பாட்டுச் செழிப்பு போன்றவைக் குறித்த உரையாடல்களில் தாக்கம் செலுத்தி வருகின்றன.

முன்பு தமிழ்நாட்டின் இந்தித் திணிப்பு எதிர்ப்பை ‘பிரிவினைவாதம்’ என்று அப்போதைய தேசியவாதிகள் அடையாளப்படுத்தினர். எங்களின் போராட்டம் நாட்டில் ஒற்றுமையின்மையை உண்டாக்கிவிடக் கூடும் என்று குற்றஞ்சாட்டினர்.

**போலி தேசியவாதிகள்!**

எனினும், இப்போது பல சகாப்தங்களுக்குப் பிறகு வரலாறு உண்மையை உணர்த்தி உள்ளது. இன்று, தேசியவாதிகள் என்று தங்களைத் தாங்களேக் கூறிக்கொள்ளும் போலி தேசியவாதிகள், இந்தி பேசாத மாநிலங்கள் மீது இந்தியைத் திணிப்பதால், நாட்டின் ஒற்றுமைக்கு அவர்களால் அச்சுறுத்தல் உருவாகி உள்ளது.

எனவே, பல மாநிலங்கள் தத்தமது மொழிகளை இந்தித் திணிப்புக்கு காவு கொடுக்காமல் காப்பாற்றியது, திராவிட இயக்கம் தான் என்ற பெருமிதத்துடன் நான் உங்கள் முன் நிற்கிறேன்.

இன்றைக்கு, இந்தியாவில் மாநில மொழிகள் உயிரோடு இருக்கின்றன என்று சொன்னால், அதற்கு மிகப்பெரிய காரணம் நாங்கள் சார்ந்திருக்கக் கூடிய திராவிட இயக்கம் என்று சொல்லிக் கொள்வதில் நாங்கள் பெருமை கொள்கிறோம்.

**தந்தை பெரியார் கேள்வி!**

திராவிட இயக்கம், தமிழ் மொழியைப் பகுத்தறிவு மிக்கதாக மாற்றவும் செய்தது. தந்தை பெரியார் அவர்கள் தமிழில் உள்ள ‘விதவை’, ‘விபச்சாரி’ போன்ற சொற்கள் பெண்பாலுக்கு மட்டும் உரியவையாக இருப்பதைக் கேள்விக்கு உட்படுத்தினார். ஒரு பெண் கணவனை இழந்தால், விதவை எனில், ஓர் ஆண் மனைவியை இழந்தால் அவனுக்கு பெயர் என்ன? என்று தந்தை பெரியார் கேள்வி எழுப்பினார்.

தமிழ் இலக்கியத்தின் மீது கட்டமைக்கப்பட்டிருந்த பழமைத்தனங்கள் எல்லாவற்றையும் நீக்கி, புதிய முற்போக்கு அர்த்தங்களை திராவிட அரசியல் வழங்கியது.

இதனால் தான் திராவிட இயக்கத்துக்கு, தமிழ் ஓர் அரசியல் ஆயுதமானது. அதன் மூலம் விளிம்புநிலை மக்களை பெருமளவில் ஈர்த்தது.

திராவிட இயக்கத் தலைவர்கள், திராவிட சித்தாந்தத்தை இன்னும் பரவலாகக் கொண்டு செல்ல, தமிழ் சினிமா முக்கியமான தளமாகியது.

1950–களுக்கு முன்பு, தமிழ் சினிமாவில் சமஸ்கிருதமயமான, அறிவியலுக்குப் புறம்பான பொருண்மைகளில் திரைப்படங்கள் வெளிவந்தன. அன்றைய காலத்தின் சினிமா மொழி முற்படுத்தப்பட்ட சாதியினருக்கும், செல்வந்தர்களுக்கும் மட்டுமே புரியும்படியாக இருந்தது.

ஒடுக்கப்பட்ட மக்கள் சினிமாவைப் பார்த்தாலும், அவர்களுக்கு எதுவும் புரிந்திருக்கவில்லை. திராவிட இயக்கம் தோன்றிய பிறகுதான் அந்த நிலை மாறியது.

சமூக நோக்குடன் கூடிய கதைகள்

1950–களுக்குப் பிறகு அரசியல் கருத்துக்களை எடுத்துச் செல்லும் ஊடகமாக சினிமா மாறியது. சமூக நோக்குடன் கூடிய கதைகளும் வசனங்களும் மக்களை அதிக அளவில் ஈர்த்தன.

பொழுதுபோக்குச் சினிமாவில், அரசியல் கருத்துக்களை எந்தச் சிக்கலும் இல்லாமல் நெய்துவிடும் அளவில் வசனம் எழுதுவது என்பது, ஒரு கலையாகவே மாறியது. அதன் மூலம் கிராம, நகர மக்களை அரசியல் கருத்துகள் சென்றடைந்தன.

அண்ணாவின் ‘வேலைக்காரி’ படம் சமூகத்தின் சாதி, வர்க்க அநீதிகளை எடுத்துக்காட்டி, மக்களிடம் பெரிய வரவேற்பைப் பெற்றது. அதன் மூலம் சமூக மாற்றத்துக்குப் படைப்புகள் எவ்வளவு தூரம் பயன்படும் என்பது புரிந்தது.

அதுபோலவே, டாக்டர் கலைஞரின் ‘பராசக்தி’ படமும் தமிழ் சினிமாவின் திரைமொழியை மாற்றி அமைத்தது. கலைஞரின் திரைக்கதைகள் சாதிய ஏற்றத் தாழ்வுகளைச் சாடின. பகுத்தறிவை வளர்த்தன. பழமைவாதங்களைக் கேள்விக்கு உட்படுத்தின.

தமிழ்ப் பண்பாட்டுக்கு ஏற்ப அவர் எழுதிய வசனங்கள், சினிமா எனும் உணர்ச்சி ஆற்றல் வழியாக திராவிட சித்தாந்தத்தை மக்களுக்கு நெருக்கமாக்கின.

அரசியலுக்கு வரும் முன்பு, நானும் சில காலம் தமிழ் சினிமாவில் இருந்தது உங்கள் அனைவருக்கும் தெரியும். தமிழ் சினிமா இன்று கோடிக்கணக்கில் வியாபாரம் செய்கிறது. அதேபோல் கேரளத்திலும் காத்திரமான சினிமா இயங்குகிறது.

சமீபமாக வெளிவரும் மலையாளத் திரைப்படங்களை நான் விரும்பிப் பார்க்கிறேன். தெலுங்கு மற்றும் கன்னட திரைப்படங்களும் நல்ல முறையில் செயல்படுகின்றன.

வேறு எந்த வட இந்திய மாநிலத்திலாவது இதுபோன்று திரைப்பட உலகம் இயங்குகிறதா என்று ஒரு நிமிடம் யோசித்துப் பாருங்கள். `இல்லை’ என்பதே பதில்.

**இந்திக்கு வழிவிட்டன!**

வட இந்திய மாநிலங்களில் பேசப்பட்ட எல்லா மொழிகளும் இந்திக்கு வழிவிட்டு ஒதுங்கிவிட்டன.

அதன் காரணமாக ‘பாலிவுட்’ என்ற இந்தித் திரைப்பட உலகம் மட்டுமே இயங்குகிறது. மும்பையில் இன்று இந்திப் படங்கள் மட்டுமே தயாரிக்கப்படுகின்றன. மராத்தி படங்கள் கூட இல்லை. அதுபோலவே போஜ்புரி, பிஹாரி, ஹரியானா, குஜராத்தி திரைப்பட உலகமும் குறைந்த அளவிலான கவனத்தையே பெறுகின்றன.

இதனால்தான் வட இந்தியாவில் உள்ள பல மாநிலங்கள் தங்களுக்கென சொந்தமாக திரைப்பட உலகத்தைக் கொண்டிருக்கவில்லை. எனவே, நம்முடைய மொழிகளை நாம் பாதுகாக்கவில்லை என்றால், இந்தி நமது மொழியை மட்டுமல்ல, பண்பாட்டையும் அடையாளங்களையும் அழித்து விடும்.

அதனால்தான், திராவிட இயக்கம் இந்தித் திணிப்பை எதிர்த்ததே தவிர, தனிப்பட்ட முறையில் இந்தி என்கிற மொழி மீது, எங்களுக்கு எந்த வெறுப்பும் கிடையாது.

இந்திய ஒன்றிய விடுதலைக்கு முன், தமிழ்நாட்டில் இருந்த நிலை குறித்து உங்களுக்குச் சொல்ல விரும்புகிறேன். அன்று சமஸ்கிருதம் பேசுபவர்கள் உயர்ந்த இடத்தில் வைக்கப்பட்டார்கள்.

**சமஸ்கிருத நுழைவுத் தேர்வு!**

சமஸ்கிருதம் சமத்துவத்தை மறுத்தது. ஒடுக்கப்பட்டவர்களின், பெண்களின், உழைப்பாளிகளின் மாண்பையும் முன்னேற்றத்தையும் தடுத்தது.

யாரேனும் மருத்துவம் படிக்க வேண்டும் என்று சொன்னால் அவர்கள் சமஸ்கிருத நுழைவுத் தேர்வில் தேர்ச்சி பெற வேண்டும்.

எப்படி இன்று நீட் தேர்வு, கிராமப்புற, பிற்படுத்தப்பட்ட, விளிம்பு நிலை மாணவர்களை மருத்துவம் கற்பதில் இருந்து தடுக்கிறதோ, அப்படி அன்று மாணவர்கள் மருத்துவம் படிக்க சமஸ்கிருதம் தடையாக இருந்தது.

அந்தத் தடையை நீக்கியது நீதிக்கட்சி தான்.

1920–களில் சமஸ்கிருத பேராசிரியர் ஒருவரின் மாதச் சம்பளம் சென்னை பல்கலைக்கழகத்தில் ரூ.200 ஆக இருந்தது. ஆனால், தமிழ்ப் பேராசிரியரின் சம்பளம் ரூ.70 தான்.

**தனித்தமிழ் இயக்கம்!**

சமஸ்கிருதம் மூலம் எந்தச் சமூகம் அதிகமாகப் பயனடைந்திருக்கும் என்பது உங்களுக்குத் தெரிந்திருக்கும்.

திராவிட இயக்கத்தின் முக்கியமான விஷயங்களில் ஒன்று, ‘தனித் தமிழ் இயக்கம்’. அதன் மூலம் தமிழில் கலந்திருந்த சமஸ்கிருத ஆதிக்கம் வெளியேற்றப்பட்டது.

சமஸ்கிருத வேர் கொண்ட சொற்கள் கவனமாக நீக்கப்பட்டு, புதிய சொற்களை திராவிட இயக்கத் தலைவர்களும் அறிவியக்க ஆளுமைகளும் வளர்த்தெடுத்தனர். இதனால், தமிழ்நாட்டின் பண்பாட்டுச் சுதந்திரம் காப்பாற்றப்பட்டது.

தமிழர்களின் சடங்குகள், பண்பாடு ஆகியவற்றில் சமஸ்கிருதத்தின் ஆதிக்கத்தை, தந்தை பெரியார் கடுமையாக எதிர்த்தார்.

அதே காலகட்டத்தில் 1937–இல் சி.ராஜகோபாலாச்சாரி அரசுப் பள்ளிகளில் இந்தியைக் கட்டாயப் பாடமாக்கினார். இந்தியைக் கொண்டு வருவதன் மூலம் அப்படியே சமஸ்கிருதத்தையும் கொண்டு வந்து விடுவார்கள், என்பதை பெரியார் கண்டு கொண்டார்.

அதனால் பள்ளிகளில் இந்தியைத் திணிப்பதற்கு எதிராக போராட்டத்தை பெரியார் முன்னெடுத்தார். அந்தப் போராட்டம் 1937 முதல் 1940 வரை நடந்தது.

**முதல் தமிழ் மொழிப் போர்!**

இந்தித் திணிப்பை முடக்கிய இந்த வெற்றிகரமான போராட்டம் ‘முதல் தமிழ் மொழிப் போர்’ என்று போற்றப்படுகிறது. தமிழ்நாட்டிலே இந்தித் திணிப்புக்கு எதிராக நூற்றுக்கும் அதிகமானவர்கள் தங்களுடைய இன்னுயிரை நீத்தார்கள். அவர்களின் தியாகத்தைப் போற்றும் வகையில் ஒவ்வொரு ஆண்டும் தி.மு.கழகம் சார்பில், ஜனவரி 26–ஆம் தேதியன்று மொழிப்போர் தியாகிகள் தின பொதுக்கூட்டங்கள் நடத்தப்பட்டு வருகின்றன.

மொழிப்போர் தியாகிகள் நினைவாக மணி மண்டபங்களை கழக அரசு கட்டி உள்ளது. அவர்களுடைய குடும்பத்தாருக்கு ஓய்வூதியம் வழங்கப்பட்டு வருகிறது. தமிழ்நாட்டின் முக்கிய சாலைகள், மேம்பாலங்களுக்கு, மொழிப்போர் தியாகிகளின் பெயரை கலைஞர் அவர்கள் சூட்டினார்கள்.

இந்தித் திணிப்புக்கு எதிராக 1937–ஆம் ஆண்டு தந்தை பெரியார் தொடங்கிய இந்தப் போராட்டம் இந்த நாள் வரை தமிழ்நாட்டில் தொடர்ந்து கொண்டிருக்கிறது.

கடந்த மாதம் கூட, தூர்தர்ஷனின் தமிழ்நாட்டுப் பிரிவான ‘டி.டி தமிழ்’, ‘இந்தி மாதக் கொண்டாட்டத்தை’ நடத்தியது. அதில் தமிழ்நாடு ஆளுநர் ஆர்.என்.ரவி கலந்துகொண்டார். அதை எதிர்த்து, எங்கள் கட்சியின் மாணவர் அணி அந்தத் தொலைக்காட்சி அலுவலகம் முன்பு, போராட்டம் நடத்தியது.

ஆளுநர் தொடர்ந்து, திராவிட சித்தாந்த வரலாற்றை இருட்டடிப்புச் செய்து வருவதை எங்கள் திராவிட மாடல் அரசின் மாண்புமிகு முதலமைச்சர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்கள் வன்மையாகக் கண்டித்தார்.

தமிழ் அடையாளத்துக்கு எதிராக உள்ள புதிய கல்விக் கொள்கை போன்றவற்றை எதிர்த்துத் தொடர்ந்து தி.மு.க போராடி வருகிறது.

**மாநில சுயாட்சி!**

நீட் தேர்வு போன்ற கொள்கைகள் தமிழ்நாட்டின் மாநில சுயாட்சிக்குச் சவால் விடுகின்றன. அதனால் பண்பாடு மற்றும் அரசியல் தளங்களில் தமிழ்ப் பெருமையை மீண்டும் மீண்டும் நிலைநாட்டுவதற்கான தேவை எழுகிறது.

நவீன திராவிடக் கூறுகள் திருவள்ளுவர் போன்ற புகழ்பெற்ற புலவர்களைப் போற்றுகின்றன. ஆனால், அவர்களுக்குக் காவி சாயம் பூச முயற்சிக்கிறது பாசிசம்.

திராவிடச் சிந்தனைகள், தமிழ்நாட்டின் மொழிக் கொள்கை, கல்வி, பொதுவாழ்வு ஆகியவற்றிலும் தாக்கம் செலுத்தி மாநிலத்தின் முதன்மை மொழியாக தமிழை முன்னிறுத்துகின்றன.

தமிழ் அரசியல் பரப்பில் தங்களைத் தக்க வைத்துக் கொள்ள வேண்டும் என்றால் தி.மு.க. உருவாக்கிய இரு மொழிக் கொள்கையை இதரகட்சிகள் யாவும் பின்பற்றுகின்றன, பா.ஜ.க.வைத் தவிர..!

தமிழ்நாடு ஆளுநர் ஆர்.என்.ரவி தமிழ்நாடு சட்டமன்றத்தில் தமிழ்நாடு என்று சொல்லாமல் ‘தமிழகம்’ என்று சொன்னது உங்கள் அனைவருக்கும் நினைவிருக்கலாம்.

ஆனால், தமிழ்நாடு அரசு எழுதிக் கொடுத்ததைப் பேச மறுத்த ஆளுநரின் உரையை நிராகரித்து முதலமைச்சர் அவர்கள் சட்டமன்றத்தில் தீர்மானம் நிறைவேற்றினார்.

இந்த உணர்வு என்றும் தொடரும். நம் இரண்டு மாநிலங்களுமே நமது பண்பாட்டின் மீது அதிகப் பற்று உடையவை. நம் இரண்டு மாநிலங்களுமே பா.ஜ.க.விடமிருந்து அச்சுறுத்தலை எதிர்கொள்கின்றன. ‘ஒரே தேசம், ஒரே தேர்தல், ஒரே பண்பாடு, ஒரே மொழி, ஒரே உணவு, ஒரே உடை, ஒரே மதம்’ என்ற நிலையை உருவாக்க பா.ஜ.க. முயற்சிக்கிறது.

அதை முறியடிக்க நாம் கரம் கோர்ப்போம். அனைத்து மாநிலங்களின் மொழி, பண்பாடு, இலக்கியம் ஆகியவற்றை பா.ஜ.க.வின் பாசிசப் பிடியிலிருந்து காப்போம்.

தொடக்கத்தில், என்னைப் பற்றிய அறிமுக உரையில் பிரச்சாரத்தின் போது, மதுரை எய்ம்ஸ்க்கு நிதி ஒதுக்காத ஒன்றிய அரசுக்கு எதிராக நான் ஒற்றைச் செங்கல் காட்டியதைக் குறிப்பிட்டார்கள். அந்தச் செங்கல் இப்போதும் என்னிடம்தான் பாதுகாப்பாக உள்ளது. ஒன்றிய அரசு எப்போது மதுரையில் எய்ம்ஸ் கட்ட நிதி ஒதுக்குகிறதோ, அப்போது நான் அதைத் திருப்பித் தந்து விடுகிறேன்.

இறுதியாக, நான் சொல்ல விரும்புவது, நான் திராவிடப் பாரம்பரியத்திலிருந்து வருகிறேன். நான் திராவிட வாழ்க்கையைப் பிரதிநிதித்துவப்படுத்துகிறேன். நாங்கள் ஆட்சியில் இருந்தாலும் சரி.. இல்லாவிட்டாலும் சரி... அதை நான் என் இறுதி மூச்சு உள்ளவரை தொடர்வேன்.

இவ்வாறு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் உரையாற்றினார்.

இந்த நிகழ்ச்சியில், ‘மலையாள மனோரமா’ குழுமத்தின் நிர்வாக ஆசிரியர் ஜெயந்த் மேமன் மேத்யூ, நிர்வாக இயக்குநர் மற்றும் வெளியீட்டாளர் ஜேக்கப் மேத்யூ, சிறப்புத் திட்ட செயலாக்கத் துறை செயலாளர் மருத்துவர். தாரேஸ் அகமது, ‘தி வீக்’ செய்தி வார இதழின் முதன்மைச் சிறப்பு செய்தியாளர் திருமதி. லட்சுமி சுப்பிரமணியன், தமிழ் எழுத்தாளர் பெருமாள் முருகன், மூத்த பத்திரிகையாளர் சாய்நாத் உள்பட எழுத்தாளர்கள், திரைப்படத்துறையினர், கலைஞர்கள், ஓவியர்கள் உள்பட பலரும் கலந்துகொண்டனர்.

> **“இப்போது பல சகாப்தங்களுக்குப் பிறகு வரலாறு உண்மையை உணர்த்தி உள்ளது. இன்று, தேசியவாதிகள் என்று தங்களைத் தாங்களேக் கூறிக்கொள்ளும் போலி தேசியவாதிகள், இந்தி பேசாத மாநிலங்கள் மீது இந்தியைத் திணிப்பதால், நாட்டின் ஒற்றுமைக்கு அவர்களால் அச்சுறுத்தல் உருவாகி உள்ளது. எனவே, பல மாநிலங்கள் தத்தமது மொழிகளை இந்தித் திணிப்புக்கு காவு கொடுக்காமல் காப்பாற்றியது, திராவிட இயக்கம் தான் என்ற பெருமிதத்துடன் நான் உங்கள் முன் நிற்கிறேன். இன்றைக்கு, இந்தியாவில் மாநில மொழிகள் உயிரோடு இருக்கின்றன என்று சொன்னால், அதற்கு மிகப்பெரிய காரணம் நாங்கள் சார்ந்திருக்கக் கூடிய திராவிட இயக்கம் என்று சொல்லிக் கொள்வதில் நாங்கள் பெருமை கொள்கிறோம்.”**